
திருவாளர்
முத்து
ஒரு மகிழ்ச்சியான கிராமத்தின் கதை...
PART - 1

அறியாமையின் காரணமாகவும் மூடநம்பிக்கையின் காரணமாகவும் பல ஆண்டுகளாக செல்வச் செழிப்பின்றி இருந்த பூஞ்சோலை எனும் ஒரு இந்திய கிராமத்தைப் பற்றிய கதை இது... ஆனால், ஒரு நாள், அதே கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன், நெடுங்காலம் அந்த கிராமத்தை வளரவிடாமல் தடுத்துக்கொண்டிருந்த மரபுகளை உடைத்து கிராம மக்களின் கண்களைத் திறந்தான். அவர்களின் அறியாமையையும், பழம்பேச்சையும் முடிவுக்கு கொண்டு வந்து அந்த கிராம மக்களின் வளர்ச்சி பாதைக்கு வழி காட்டினான். இதன் காரணமாக, ஒரு சில ஆண்டுகளுக்குள் அந்த கிராமம் செழித்து வளர்ந்து மற்ற கிராமங்களுக்கு முன்மாதிரியாக மாறியது. அது எப்படி நடந்தது என்று தெரிந்து கொள்ள வேண்டுமா?

அத்தகைய மாற்றம் எப்படி வந்தது, அத்தகைய புரட்சி எப்படி நடந்தது. அந்தக் கிராமத்தின் விதி எப்படி மாறியது என்பதை பார்ப்போம்....





கிராமத்தின் தலைவருடன்
மக்கள் சிலர் கூடியுள்ளனர்.
அச்சமயத்தில் திடீரென்று
ஆண்கள் மற்றும் பெண்கள்
ஒன்று கூடி கிராமத்தலைவரை
நோக்கி வருகின்றனர்.
அனைவரும்:
வணக்கம் ! தலைவரே
தலைவர்:
வணக்கம் ! வாங்க வாங்க !
தலைவர்: அட முத்து நீயா...
விஜயா, ரவி, ரமா.... மற்றும் பல பேர்
ஒன்றாக வந்திருக்கிறீர்கள்
என்ன விஷயம்?
முத்து: தலைவரே!
நம் கிராமத்தில் அணுமின்
நிலையம் வரப்போகிறது என்று
கேள்விப்பட்டோம்.
இது உண்மையா?



தலைவர்: ஆம், நான் கூட கேள்விப்பட்டேன். ஆனால் நீங்கள் எல்லோரும் ஏன் இப்படி வருத்தப்படுகிறீர்கள்? இது நம் கிராமத்திற்கு மிகவும் நல்ல விஷயமாயிற்றே
விஜயா: நீங்க என்ன சொல்றீங்க தலைவரே? அதிலிருந்து அதிகமாக கதிர்வீச்சு பரவும் என்று சொல்றாங்க, அதனால் நம் உயிருக்கு பாதிப்பு வரும் என்றும் சொல்றாங்க. நம்முடைய குழந்தைகள் மற்றும் கால்நடைகளுக்கு குறைபாடுகள் ஏற்படும்னு கேள்விப்பட்டோமே.
தலைவர்: (சிரிக்கிறார்) என்ன சொல்ற விஜயா? அது உண்மையென்றால் அணுமின் நிலையத்தில் வேலை செய்யற அத்தனை பேருமே செத்து போயிருக்கணுமே? இது முற்றிலும் தவறு.
தலைவர்: நாம இதைப்பற்றி பயப்பட வேண்டிய அவசியமே இல்லை.
மக்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்கின்றனர்
தலைவர்: உங்களுக்கு ஒன்று தெரியுமா? நாம தெய்வமா வணங்கற சூரியனிலிருந்தும் கதிர்வீச்சு வருகிறது. நாம வசிக்கிற வீடுகள் கூட கதிர்வீச்சை வெளியிடுது. நாம சாப்பிடும் சாப்பாடு, குடிக்கும் நீர், தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி, கைப் பேசி இது எல்லாமே கதிர்வீச்சை வெளியிடுது. (எல்லோரும் அமைதியாகக் கேட்கிறார்கள்)


தலைவர்:
இவரை உங்களுக்கு தெரிகிறதா?
(தலைவர் சேகரை நோக்கி கை காட்டுகிறார்)
இவர் தான் என்னுடைய பேரன் சேகர்.
இன்று தான் நகரத்தில் இருந்து வந்திருக்கிறார்.
சேகர் இப்ப உங்ககிட்ட அணுமின் பற்றி
தெளிவாக விளக்கி கூறுவார்.
கிராமத்தினர் அனைவரும்
சேகரை நோக்குகின்றனர்.
சேகர்:
எல்லோருக்கும் வணக்கம்
சேகர்:
என்ன விஜயா அக்கா,
என்னை தெரியுதா?
விஜயா:
(சேகரைப் பார்த்து சிரிக்கிறார்...)
சேகரா இது? இவ்வளவு
பெரியவனாயிட்டான்!
சேகர்: கதிர்வீச்சைப்பற்றி தாத்தா
சொல்வது உண்மைதான். அது ஒரு
வகையான ஆற்றல். அது எல்லா
இடத்திலையும் இருக்கும். அதேபோல்
அணுமின் நிலையத்தைப் பொறுத்தவரை
இது சாதாரணம் அதைப்பற்றி
கவலைப்பட தேவையில்லை.
புரிகிறதா?


சேகர்: சரி ஒன்று சொல்லுங்க, உங்களின் எத்தனை பேர் எக்ஸ்-ரே எடுத்துருக்கிங்க?
(மூன்று-நான்கு பேர் கைகளை உயர்த்துகின்றனர்.....)
சேகர்: ஒரு முறை எக்ஸ்-ரே எடுக்கும் போது நம் உடலில் பாயக்கூடிய கதிர்வீச்சு ஒரு அணுமின் நிலையத்துக்குப் பக்கத்தில் 20 வருஷம் வசிக்கும்போது ஏற்படும் கதிர்வீச்சுக்கு சமம் என்று உங்களுக்குத் தெரியுமா?
எல்லோரும்: அப்படியா? (ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்...)
ரமா: ஆனா, தம்பி, அணுமின் நிலையத்தில் வேலை செய்பவர்களுக்கும் மற்றும் அதனை சுற்றி வசிப்பவர்களுக்கும் பல்வேறு விதமான புற்றுநோய்கள் வரக்கூடிய அபாயம் இருக்குன்னு சொல்கிறார்களே.
சேகர்: ரமா அக்கா, உங்களுக்கு தவறான தகவல்களைச் சொல்லியிருக்காங்க. அணுமின் நிலையத்தில் வேலை செய்வதாலேயோ இல்லை அதை சுற்றி வசிப்பதாலேயோ எந்த வித புற்று நோய்களும் வராது. ரமா அக்கா, அப்படி நீங்க சொல்றது உண்மையின்னா அதுல வேலை செய்ய யாரும் முன் வரமாட்டாங்களே.



சேகர்: உங்களுக்கு தெரியுமா? உங்க ஊர்ல போன வருஷம் மட்டும் புகையிலை போட்டதால வாயில் புற்றுநோய் வந்து 4 பேர் செத்துருக்காங்க.
சேகர்: அணுமின் நிலையத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு அங்குள்ள பாதுகாப்பு உபகரணங்கள், கருவிகள், உடைகள் போன்றவற்றினால் அங்கு பல ஆண்டுகள் வேலை பார்த்தாலும் கதிர்வீச்சால பாதிக்கப்படாம இருக்காங்க
சேகர்: இந்த கதிர்வீச்சைப் பயன்படுத்தி சி.டி.ஸ்கேன் மற்றும் எம்.ஆர்.ஐ மூலமா புற்றுநோயைக் கண்டு பிடிக்கவும் அதை குணப்படுத்தவும் முடியும் தெரியுமா?
விஜயா: ஆனால் தம்பி, நேற்று நான் கவிதாவைப் பார்த்தேன். அணுமின் நிலையத்திற்கு அருகில் வசிக்கும் பெண்கள் தாய்மை அடைய முடியாது, அவர்களுக்கு குழந்தை பாக்கியமே இல்லாம போயிடும்னு சொல்றாளே? அது உண்மையா?
சேகர்: (சிரிக்கிறான்) விஜயா அக்கா, கவிதா அக்கா முற்றிலும் தவறா சொல்லியிருங்காங்க அது ஒரு வதந்தி. உண்மையைச் சொல்லணும்னா கதிர்வீச்சைப் பயன்படுத்தி இயங்குற சோனோகிராபி என்கிற கருவியைக் கொண்டு கருவுற்றிருக்கும் தாயின் வயிற்றில் உள்ள குழந்தையின் வளர்ச்சியை மிக நன்றாக பார்க்க முடியும். அதனால கதிர்வீச்சுன்றது உங்கள் நண்பன்தான் எதிரியில்லை. புரிஞ்சிதா அக்கா, அப்புறம் முத்து அண்ணா உங்களுக்கு ஞாபகம் இருக்கா? கிருமிதொற்று ஊசியை பயன்படுத்தினதால நம்ம கிராமத்தில் இருக்கற ரமேஷோட பையன் கார்த்தி போன வருஷம் இறந்துட்டானே?


சேகர்: ஆனா உண்மையில கதிர்வீச்சின் உதவியால் ஊசியில ஏற்படும் கிருமித்தொற்றை நீக்க முடியும். அது மட்டுமில்லாமல் மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு அறுவைசிகிச்சைசெய்ய பயன்படுத்தப்படும் கருவிகளையும் கிருமித்தொற்றில் இருந்து கதிர்வீச்சின் மூலம் பாதுகாக்கலாம்.
முத்து: ஆனா சேகர்... ஏன் நமது கிராமத்தில் அணுமின் நிலையம் அமைக்கிறார்கள்? அப்படி என்ன சிறப்பு அதில் இருக்கிறது? வேறு வழிகளில் மின்சாரத்தை பெற முடியாதா? அணுமின் நிலையம் அமைக்கப்படுவதால் நமது மாந்தோப்புகள், விவசாய நிலங்கள், பயிர்கள், மீன் பிடி தொழில் இப்படி அனைத்திற்குமே பாதகமாக இருக்கும் என்று கேள்விப்பட்டோமே?
சேகர்: இது ஒரு நல்ல கேள்வி! முத்து அண்ணா மின்சாரம் தயாரிக்க பல மாற்று வழிகள் இருந்தாலும், அணுமின் நிலையத்தின் மூலம் தயாரிக்கப்படும் மின்சாரம் தூய்மையாகவும், சுற்றுச் சூழலுக்கு கேடு விளைவிக்காததாகவும், மலிவான விலையில் கிடைப்பதாகவும் இருக்கிறது. அதனால், உங்கள் விவசாயம், பழத்தோட்டங்கள், மீன்கள் அனைத்துமே பாதிக்கப்படாமலும், பாதுகாப்பாகவும் இருக்கும்.
சேகர்: நிலக்கரி மற்றும் வேறு சில வளங்களை பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கப்படும் போது அது சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கிறது. தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் வளிமண்டலத்தில் கலப்பதனால் நம்முடைய உடல் ஆரோக்கியம் பாதிப்படையும்.
சேகர்: அது மட்டுமில்லை... இன்னும் ஒரு சில சுவாரஸ்யமான விஷயங்களையும் நான் சொல்கிறேன். உணவு கதிர்வீச்சு கறைப்புத் தொழில் நுட்பத்தின் உதவியால பழங்களும், காய்கனிகளும் சீக்கிரமாக அழுகுவதை நாம் தடுக்க முடியும். வெங்காயம், உருளை கிழங்கு போன்றவை சீக்கிரமாக முளைவிடாமல் செய்ய முடியும் அரிசி, பருப்பு, பயிறு வகைகள் போன்றவற்றை பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க முடியும். இவை நோய் எதிர்ப்புடன் செழிப்பாக வளர முடியும். மேலும் கதிர்வீச்சின் உதவியால் விதைகளின் உற்பத்தியை அதிகரிக்க முடியும்.


சேகர்: அண்ணா, இன்னும் ஒரு விஷயம்... நிலக்கரி, இயற்கை எரிவாயு போன்ற பல்வேறு வளங்களிலிருந்தும் மின்சாரத்தைப் பெற முடியும் என்பது உண்மைதான். ஆனால் இப்பொழுது இவ்வளங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. ஆனால் அணு வளங்கள் நம்மிடம் நிறைய இருப்பதால் நம்மால் பல ஆண்டுகளுக்கு மின்சாரத்தை தயாரிக்க முடியும்.
முத்து: ஆனா தம்பி, சூரிய ஒளியிலிருந்தும் காற்றிலிருந்தும் கூட மின்சாரத்தை தயாரிக்கலாம்னு நாங்கள் கேள்விப்பட்டோம். அப்படி இருக்கும் போது ஏன் அணு மின்சாரத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் தர்றாங்க?
சேகர்: முத்து அண்ணா உங்க கேள்வி அருமையானது? சந்தேகமே வேண்டாம். சூரிய ஒளியிலிருந்தும் காற்றிலிருந்தும் கூட மின்சாரத்தை தயாரிக்கலாம். ஆனால் இந்த இரண்டிற்குமே மிகப்பெரிய அளவிலான நிலமும், வசதியும் தேவைப்படும். அடுத்து சூரியன் இல்லாத போது நாம எப்படி மின்சாரம் தயாரிக்க முடியும்?
சேகர்: காற்றாலையைப் பொருத்தவரை, போதுமான வேகத்தோட எப்பொழுதும் காற்று வீச வேண்டும். ஆனால், அணுமின் நிலைங்களைப் பொருத்தவரை 24 மணி நேரமும் மின்சாரம் தயாரிக்க குறைவான நிலமும் வசதியும் போதுமானது புரியுதா? அது மட்டுமில்லாமல் இங்கு மின்சாரம் தயாரிக்க ஆகும் செலவும் மிகக்குறைவாகும்.
(மக்கள் சிந்திக்க தொடங்கினார்கள்...)
விஜயா: ஆனால் சேகர், அணு ஆற்றல் ரொம்ப ஆபத்தானதுன்னும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதுன்னும் கேள்விபட்டிருக்கேன். ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் அந்த பகுதியுள்ள அனைத்து உயிரினங்களையும் அழித்துவிடும்னு சொல்றாங்களே.
சேகர்: விஜயா அக்கா, உங்களுக்கு தெரியுமா? இந்த உலகத்திலேயே மிகவும் ஆபத்தானது தீ மட்டும் தான். அதைவிட ஆபத்தானது வேற எதுவும் இல்லை. 8 லட்சம் வருடங்களுக்கு முன்னால் தீயை கண்டுபிடிச்சப்ப அந்த தீயால் ஆயிரக்கணக்கான உயிர் மற்றும் பொருள் சேதம் ஏற்பட்டது. ஆனா, இப்போ ஒரு சின்ன பையன் கூட தீப்பெட்டியை சட்டை பைக்குள் வைத்துக் கொண்டு சுற்றி வர்றான். ஏன்னா, அதை எப்படி திறமையாப் பயன்படுத்தனும்னு நமக்கு தெரியும். அதேபோல பாதுகாப்பு விதிமுறைகளை சரியாக நாம கடைப்பிடிச்சா விபத்துக்களை தவிர்க்கலாம். அது மட்டுமில்ல தொடர்வண்டி விபத்துக்கள் விமான விபத்துக்கள் இப்படி பல விபத்துக்களில் மக்கள் உயிர் இழக்கிறார்கள். அதனால் இவற்றில் யாரும் பயணம் செய்யாமல் இருக்காங்களா? சொல்லுங்க?



சேகர்: ஒவ்வொரு வருஷமும், பூகம்பம், நிலச்சரிவு, சாலை விபத்து இப்படி எத்தனையோ ஆபத்துக்களால் பல்லாயிரக்கணக்கானோர் தங்கள் உயிரை இழக்கின்றனர். இப்படிப்பட்ட துயரங்களையே நினைச்சுட்டு இருக்காம, பல நல்ல விஷயங்களை வரவேற்க முற்படணும்.
முத்து: ஆனால் சேகர்... அணுமின் நிலையம் அமைக்கப்படுவதால எங்களுக்கு என்ன பயன்? எங்களோட நிலத்தையெல்லாம் அரசு கையகப்படுத்தினால் நாங்கள் எப்படி வாழமுடியும்?
சேகர்: முத்து அண்ணா... உங்க நிலத்தை அரசு கையகப்படுத்தினா அதற்கு இணையான இழப்பீடு உங்களுக்கு கிடைக்கும். அது மட்டுமில்லாமல் மக்களை மாற்று குடியமர்த்துவதும் அரசின் கடமையாகும். மேலும் அணுமின் நிலையம் இங்கு அமைந்த பிறகு நம்ம கிராமம் எவ்வளவு செழிப்பாகும்னு நினைச்சு பாருங்க.
School
சேகர்: மின்பற்றாக்குறையால, ஒரு நாளைக்கு சில மணி நேரங்களே மின்சாரம் கிடைக்கிற இந்த இடத்தில 24 மணி நேரமும் மின்சாரம் கிடைக்கும். கிராமத்தில் உள்ள உங்கள் பிள்ளைகள் படிப்பதற்காக பள்ளிக்கூடங்கள் கட்டி தரப்படும், தரமான கல்வி போதிக்கப்படும். நவீன சிகிச்சைமுறைகள் உள்ள தரமான மருத்துவமனைகள் நிறுவப்படும்.
சேகர்: மேலும், சாலை மற்றும் குடிநீர் வசதியை மேம்படுத்துவார்கள். சமுதாயக் கூடங்கள் அமைக்கப்படும். தகுதிக்கு ஏற்ப வேலை வாய்ப்புகள் வழங்கப்படும்.
சேகர்: ஆக மொத்தம், உங்கள் எல்லோருடைய வாழ்க்கையும் செழிப்பாகும். அதனால் கிராமத்தில் மகிழ்ச்சி பொங்கும்.
(எல்லோருடைய முகத்திலும் மகிழ்ச்சி பரவுகிறது)
முத்து: தம்பி, நீ சொல்றத எல்லாம் நாங்க ஏத்துக்கிறோம். ஆனா ஒரு விஷயம் அணுமின் நிலையம் எவ்வளவு பாதுகாப்பானது? சுனாமி, பூகம்பம் போன்றவை ஏற்பட்டால் எங்களின் நிலைமை என்ன ஆகும்?


ஆமாம். ஆமாம், எங்களுக்கு எல்லாம் என்ன ஆகும்? (அனைவரும் ஒரே குரலில் கேட்கிறார்கள்)
சேகர்: அமைதி, அமைதி... உங்களுடைய கவலை நியாயமானதுதான் ஆனால் ஒரு விஷயத்தை உங்களுக்கு தெளிவுபடுத்த விரும்பறேன். நம் நாட்டில் உள்ள அனைத்து அணுமின் நிலையங்களும் மிகவும் பாதுகாப்பானவை. பல்வேறு பரிசோதனைகளுக்கு பிறகே அரசாங்கம் அணுமின் நிலையங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்குகிறது.
சேகர்: எந்த இடத்தில் அணுமின் நிலையங்கள் அமையப்போகிறதோ அந்த இடத்தில் பல வருஷங்களுக்கு பல்வேறு வகையான புவியியல் ஆய்வுகள் நடத்தப்படும். அந்த இடத்தில் பூகம்பமோ, சுனாமியோ வருவதற்கான அறிகுறிகள் இருந்தால் அரசாங்கம் அணுமின் நிலையம் அமைக்க அனுமதி வழங்காது. உங்களுக்கு ஞாபகம் இருக்கா? நம் நாட்டில் குஜராத்தில் பூகம்பம் ஏற்பட்டது, தமிழ்நாட்டில் சுனாமி வந்தது, அந்த இக்கட்டான சூழ்நிலையிலும் நம்முடைய அணுமின் நிலையங்கள் பாதிப்படையாமல் பாதுகாப்பாக இருந்தன. மேலும் பாதுகாப்பான முறையில் மின்சாரத்தை தயாரித்துக்கொண்டு இருந்தன.
ரவி: ஆனா சேகர் தம்பி அணுமின் நிலையம் நமக்கு எதுக்கு தேவை? இப்ப நாங்க எல்லோரும் நல்லாதானே இருக்கோம் விவசாயமும், மீன் பிடித்தலும் தானே எங்க தொழில். நாங்க அந்த தொழிலையே செய்ய விரும்பறோம். எங்களுக்கு எதுக்கு மின்சாரம்?
முத்து: ஆமா தம்பி எங்க முன்னோர்களும் இந்த தொழிலைத்தான் செஞ்சாங்க பல வருஷமா நாங்களும் இந்த தொழிலைத்தான் செய்யறோம். வருங்காலத்தில் எங்க பிள்ளைகளும் இந்த தொழிலைத்தான் செய்வாங்க. இப்படி எங்கள் வேலை நடந்து கொண்டு தானே இருக்கிறது... அணுமின் நிலையத்தின் அத்தியாவசியம் என்ன?
ரமா: சரிதான், நாங்க எங்களுடைய வீட்டில் இப்போ சந்தோஷமாகத்தானே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்... பிறகு ஏன் நாங்கள் கவலைப்படவேண்டும்.
விஜயா: ஆமாம், எங்களுக்கு பசிக்கு உணவும், உடுத்த நல்ல துணிமணிகளும் கிடைத்து கொண்டுதானே இருக்கிறது... இதைவிட வேறென்ன எங்களுக்கு வேண்டும்?


சேகர்: முத்து அண்ணா, விஜயா அக்கா நல்லா சொன்னீங்க போங்க. இப்படி எல்லாருமே யோசிச்சியிருந்தாங்கன்னா 60 வருஷத்துக்கு முன்னாடி இருந்த மாதிரி தான் நம்ம நாடு இன்றைக்கும் இருக்கும். சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகளுக்கு பிறகு இன்று நம் இந்தியா உலகத்தில் உள்ள பல சிறந்த நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. கொஞ்சம் யோசித்து பாருங்கள்..... உங்களை மாதிரியே ஒவ்வொருவரும் அவங்க அவங்க கிராமத்திலேயே விவசாயமோ அல்லது மீன் பிடி தொழிலோ மட்டும் செய்தால் போதும் என்று நினைத்தால் நம் நாட்டில் மருத்துவர், பொறியாளர், விஞ்ஞானி, ஆசிரியர் மற்றும் பல உத்தியோகஸ்தரர்கள் உருவாக முடியுமா?
சேகர்: உங்களுக்கு உடம்பு சரியில்லாமல் போனால் யார் மருத்துவம் பார்ப்பார்கள்? உங்களுடைய அன்றாட தேவைகளுக்கான பொருட்களை யார் உருவாக்குவார்கள்? புதிய புதிய கண்டுபிடிப்புகளை யார் செய்வார்கள்? சுதந்திரம் கிடைத்து 60 வருஷம் கழித்து இன்று கூட உங்கள் எண்ணத்தை நீங்க மாத்திக்கலை இன்னும் கூட மூடநம்பிக்கையிலும் அறியாமையிலும் மூழ்கி இருக்கீங்க
சேகர்: முத்து அண்ணா... நாட்டோட வளர்ச்சி மிக முக்கியமானது. மின்சாரம் தான் இதற்கெல்லாம் பெரிய ஆதாரம். நம் நாட்டில் மின்சாரம் தயாரித்தால்தான் நாட்டில் முன்னேற்றம் ஏற்படும். உங்க கிராமத்தில் மின்சாரம் இருந்தால்தான் மின் இயந்திரம் மூலம் மிக அதிக அளவு நீர்பாசனம் செய்ய முடியும். மேலும் நவீன டிராக்டர் மற்றும் தரமான விதைகளின் உதவியால முன்பை விட 10 மடங்கு அதிக விளைச்சல் உங்களுக்கு கிடைக்கும் உங்களுக்கும் ஒரு நிலையான வாழ்க்கை கிடைக்கும்.
(எலோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்கள்)


சேகர்: விஜயா அக்கா வேளா வேளைக்கு சாப்பாடு கிடைச்சா மட்டும் போதுமா? உங்கள் பிள்ளைகள் பள்ளிக்கு செல்வதில்லை... அவர்களுக்கு சரியான கல்வி கிடைப்பதில்லை. அவங்களுக்கு தேவையான ஊட்டச்சத்துள்ள உணவு கிடைக்கறதில்லை.... உடல்நிலை சரியில்லாத நேரத்தில் அவர்களுக்கு மருத்துவரின் சிகிச்சை கிடைப்பதில்லை... இன்னும் எவ்வளவு நாள்தான் மந்திரவாதிகளையும் போலி மருத்துவர்களையும் நம்பி உங்களுக்கு நீங்களே கெடுதல் விளைவிப்பீங்க? உங்களுக்கு எப்பதான் ஞானம் பிறக்குமோ? கிராமத்தோட வளர்ச்சியிலதான் உங்கள் பிள்ளைகளோட வளர்ச்சி இருக்கு உங்கள் பிள்ளைகள் நன்றாக படித்து டாக்டர், இன்ஜினீயர், ஆசிரியர், விஞ்ஞானி ஆவார்கள்... கொஞ்சம் யோசிச்சு பாருங்க, உங்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி கிடைக்கும்? உங்க கிராமத்திற்கும் நல்ல பெயர் கிடைக்கும்.
சேகர்: அப்புறம் ரமா அக்கா... குடிசைவீட்டில் வசிப்பதில் உங்களுக்கு வேண்டுமானால் சந்தோஷமாக இருக்கலாம்... ஆனால் உங்கள் குழந்தைகளுக்கு அல்ல. இன்றும் கூட நீங்கள் 60 வருஷத்துக்கு முந்தைய பழம் பேச்சுக்களையே பேசறீங்க... இன்று நமது நாடு எவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கு... நம் பாரத நாட்டிலுள்ள பல மருத்துவர்கள், பல விஞ்ஞானிகள், பல ஆசிரியர்கள், பல பொறியாளர்கள், பல விளையாட்டு வீரர்கள் இன்னும் பல துறையினர் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு வித்திட்டதுடன் உலக அளவில் நம் நாட்டிற்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள். ஆனால், இன்று கூட நீங்களெல்லாம் ஒரு குறுகிய வட்டத்திற்குள் வாழ்ந்திட்டு இருக்கீங்க.
சேகர்: அப்படி அவங்களும் உங்களைப்போல் யோசிச்சுயிருந்தால் இன்னிக்கு நம்ம நாட்டோட நிலை என்ன? என்னையே எடுத்துக்கோங்க, ஒரு வேளை என்னுடைய பெற்றோர்கள் நகரத்திற்கு அனுப்பி படிக்க வைக்காமல் இருந்தால் நானும் உங்களைப் போல படிப்பறிவின்றி நல்லது கெட்டது தெரியாமல் சுற்றிக் கொண்டிருப்பேன்.
சேகர்: மேலும், ஒரு முக்கியமான விஷயம். உங்க கிராமத்தில் வளர்ச்சி ஏற்படணும்னா மின்சார உற்பத்தி மிக மிக அவசியம். எவ்வளவு அதிகமா மின்சாரம் உற்பத்தி செய்யப்படுதோ, அவ்வளவு அதிகமாக விவசாயம் நடைபெறும், தொழிற்சாலைகள் பெருகும்.... அதன்பிறகுதான் உங்க கிராமம் செழிப்பாகும், நாடும் மகிழ்ச்சியடையும். இப்ப முடிவை உங்ககிட்டயே விட்டுடறேன்.... அறிவியலா? அல்லது மூடநம்பிக்கையா? நீங்களே தேர்ந்தெடுங்க....


சேகர்: ரமா அக்கா,
இன்னொரு விஷயம், நாம் எல்லாம் இங்கு கூடி அணு ஆற்றல் பற்றியும் கதிர்வீச்சுப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறோம்.... அதே நேரத்தில் அணுமின் நிலையத்தில் வேலை பார்க்கும் நமது இன்ஜினியர் அவரது குடும்பத்துடன் நலமாக வாழ்வதுடன் மட்டுமின்றி நாட்டின் வளர்ச்சியிலும் பங்கு கொள்கிறார்.
முத்து: ஆமா தம்பி
நீ சொல்வது முற்றிலும் சரி எங்களுடைய எல்லா பயமும் விலகி விட்டது. பல வருடங்களாக மூடநம்பிக்கையிலும் பழமையிலும் மூழ்கி இருந்த எங்களை இன்று நீ விடுவித்துவிட்டாய். மேலும் இந்த தெளிவான விளக்கத்தினால, நாங்க எல்லோரும் மானசீகமா மாற்றமடைய வேண்டியது அவசியம் அதற்கு நாங்க தயாராகவும் உள்ளோம்.
சோர்: அப்புறம் ஒரு விஷயம், யாராவது அணுமின் நிலையத்தைப் பற்றி தவறான தகவல்களைத் தந்தால், அதை நம்பாதீர்கள் புரிகிறதா?
எல்லோரும்: புரிகிறது சேகர்.
தம்பி, நீ எங்கள் கண்களை திறந்துவிட்டாய் மேலும் எங்களின் தவறான எண்ணங்களை துடைத்தெறிந்து விட்டாய் மேலும்.
இனி நாங்களும் நம் நாட்டின் வளர்ச்சியில் பங்கெடுத்துக் கொள்வோம்.
எங்கள் கிராமத்தை மகிழ்ச்சியாகவும், நாட்டை செழிப்பாகவும் மாற்ற நாங்கள் தயாராகிவிட்டோம்.
சேகர்: இன்னொரு விஷயம்,
அதை கேள்விப்பட்டால் நீங்க ரொம்ப ஆச்சர்யப்படுவீங்க. அணுமின் நிலையங்களின் சுற்றுச்சூழல் சுத்தமாகவும், பசுமையாகவும், இயற்கை செழிப்போடும் இருப்பதனால், பல்லாயிரக்கணக்கான பறவைகளுக்கும், பட்டாம்பூச்சிகளுக்கும், மேலும் பல உயிரினங்களுக்கும் புகலிடமாக விளங்குகிறது.




சேகரின் விளக்கங்களை கேட்டபின், முத்துவும் மற்ற அனைத்து மக்களும் அணுமின் நிலையத்தை சுற்றிப்பார்க்க விருப்பம் கொள்கிறார்கள்.

அப்படி அவர்கள் அணுமின் நிலையத்தை பார்வையிடும் போது என்ன நிகழ்கிறது?
அவர்கள் அங்கே என்ன பார்க்கிறார்கள்?
அவர்களுக்கு எப்படிபட்ட அனுபவம் ஏற்படுகிறது?

தெரிந்துகொள்ள காத்திருங்கள் அடுத்த பாகம் வரும் வரை

**“அணு சக்தி.... தேசத்தின் சக்தி**
**தூய்மையான சக்தி... தூய்மையான பாரதம்.”**

# முத்துவின்
## பயணம்...

**அணுமின் நிலையத்தை சுற்றி பார்க்கும் கதை**

தொடரும்...




एनपीसीआईएल
NPCIL

பொதுநலன் கருதி வெளியிடப்பட்டது
இந்திய அணுமின் கழகம் (நியூக்ளியார் பவர் கார்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்)
(ஒர் இந்திய அரசு நிறுவனம்)

வெளியிடுவோர்
நிறுவன திட்டமிடல் மற்றும் நிறுவன தகவல்தொடர்பு இயக்குநரகம்
(டைரக்டரேட் ஆஃப் கார்போரேட் பிளானிங் அன்ட் கார்போரேட் கம்யூனிகேஷன்ஸ்) [CP&CC]


6-S-14, விக்ரம் சாராபாய் பவன், அணுசக்தி நகர், மும்பை - 400094
மின்னஞ்சல்: cpcc@npcil.co.in | இணையதளம்: www.npcil.nic.in